New
Science Academy
KANNATHIDY - JAFFNA
90 A/L
PAPER CLASS
Pure & App.
Sat & Sun - 7.30 9.30
DAY CLASS
★ நிகழ்தகவு ★
Fri - 3.00 - 5.00
BY
★ பிரேம்நாத் ★

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
B. M. C. முன்பாக -
JAFFNA.
90 A/L
PAPER CLASS
BY
★ சண் ★
Organic 12.30
In - Organic 1.30
Tue, Thu, Fri

சுடர் 5: பிரமோதூத ஞூ வைகாசி மீ 22உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 11 (05 - 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 104

# மாகாணசபையைக் கலைக்க அடுத்த வாரத்தில் சட்டமூலம்

## மூன்று மாதங்களுக்குள் தேர்தல்

### அதற்குமுன் ஆறாவது திருத்தத்தை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

★ விசேட நிலைமைகளின் கீழ் மாகாணசபையைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் விதத்தில் விசேட சட்டமூலம் ஒன்றை அரசாங்கம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரும்.

★ இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டமான கையோடு வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்படும்.

★ மாகாணசபை கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்தக்கூடியதாக தேர்தல் திகதி உடனடியாக நிர்ணயிக்கப்படும்.

★ இந்தத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கக் கூடியதாக; அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஒன்றை அரசாங்கமே உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

இவ்வாறு அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு உறுதியளித்திருக்கிறது.

கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பேச்சுக்களை நடத்திவிட்டு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

கொழும்புப் பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து பேச்சுக்களில்கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மாகாணசபையைக்கலைப்பதற்கானவிசேடசட்டமூலத்தை அரசு அடுத்த வாரம்நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தாலும் அது குறித்து நாம் கவனமாகவே இருப்போம்.

சாதாரண நிலைமைகளின் கீழ் மாகாணசபையை ஜனாதிபதி தன் எண்ணப்படி கலைப்பதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் தற்போதைய சட்டங்கள் இறுக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மாகாணசபையைக்கலைக்க தற்போது கொண்டுவரப்படும் சட்டம் இதனைத் தளர்த்தும் விதத்தில் அமையாது இருப்பதை நாம் உறுதி செய்யவேண்டும்.

ஆறாவது திருத்தத்தை

[5ஆம் பக்கம் பார்க்க]

## பயிலுநர் ஆசிரியருக்கு 21 நாள் லீவு உண்டு

கொழும்பு, ஜூன் 5

பயிலுநர் ஆசிரியர்கள் அரசாங்க ஆசிரியர்களாகக் கருதப்படாவிட்டாலும் வருடம் 21 நாள் விடுமுறை வழங்கப்படவிருக்கிறது.

கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

நாடெங்கும் அண்மையில் நியமிக்கப்பட்ட 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இதுவரை லீவு வழங்கப்படவில்லை.

அவர்களுக்கு இனி ஏழு நாட்கள் சமயாசமய லீவும், 14 நாட்கள் சுகவீன லீவும், வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அதிகாரி தெரிவித்தார். (அ-2, 3)

## துப்பாக்கிச் சூடு; தீவைப்பு நடத்திவிட்டுத் தற்கொலை!

கொழும்பு, ஜூன் 5

உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு, அந்த அலுவலகத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பையும்தீயிட்டுவிட்டு நஞ்சு அருந்தித் தற்கொலை செய்தார் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள்.

இரத்தினபுரி சஹவத்தை

[5 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



கிழக்கிலை மூடிப் போட்டு வடக்கிலை திறக்காம விட்டாச் சரிதான் பாருங்கோ...!

## தடைப்பட்டது

கொழும்பு நகரில் மாளிகாகந்தை பிரதான நீர் விநியோக குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் நேற்று கொழும்பு நகரில் நீர் விநியோகம்தடைசெய்யப்பட்டிருந்தது. [ப]

# இராணுவ முகாம்கள் சில மட்டக்களப்பில் மூடப்படும்

மட்டக்களப்பு, ஜூன் 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்போதுள்ள இராணுவ முகாம்களில் சிலவற்றை மூடுவதற்கு அரசாங்கத் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேற்றைய பேச்சில் இணக்கம்

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரசாங்கத் தரப்புக்கும் இடையில்நேற்று நடைபெற்ற மாவட்ட மட்டப் பேச்சு வார்த்தையின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாக புலிகள் தரப்புப் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்களின் போது அரசாங்கத் தரப்பில் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் வடக்கு- கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி ஜெனரல் ஸ்ரான்லி சில்வா, வடக்கு-கிழக்கு உதவிப் பொலீஸ் மா அதிபர் ஈ. ஆனந்தராஜா, மட்டக்களப்புப் பிராந்திய இராணுவ, விமானப் படை, பொலீஸ் படைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரத்தினம் யோகி, மட்டக்களப்பு மாவட்டத் தளபதி கருணா மட்டக்களப்பு மாவட்ட அர

(5 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள்-அரசு வாராந்தம் மாவட்ட மட்டத்தில் பேச்சு!

### அடுத்த வாரம் திருகோணமலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும், அரசாங்கத் தரப்பு பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளும் விஜயம் செய்து அந்தந்த மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வர்.

அவர்கள் இருசாராரும் ஒவ்வொருமாவட்டத்துக்கும் ஒவ்வொரு வார விஜயம் செய்வர்.

இந்த வாரத்துக்குரிய விஜயம் மட்டக்களப்புக்கு ஆகும். அங்கு நேற்று விடுதலைப் புலிகள் - அரச தரப்புப் பேச்சு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு பிரிகேடியர்கள் கொழும்புக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். கோட்டை, பலாலி இராணுவ முகாம் பிரிகேடியர்கள் உடனடியாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நடைபெற இருக்கும் பாதுகாப்பு அமைச்சின் முக்கியமான மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் அழைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்றும் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. (ஒ-10)

## ஈரோஸ் கைவிட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 5

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர ஈரோஸ் எடுத்த முயற்சி கைவிடப்பட்டது.

கடந்த மூன்று நாட்களாக ஜனாதிபதி பிரேமதாஸா, அமைச்சர் ஹமீத் ஆகியோருடன் ஈரோஸ்பிரமுகர் திரு. வே. பாலகுமார் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த விடயம் குறித்து ஈரோஸ் இன்றுதான் இறுதிமுடிவு எடுக்கும் என்று திரு. பாலகுமாரன் நேற்றிரவு கொழும்பில் தெரிவித்தார். [உ-3]

## இந்தியமீனவர் 30 பேரும் 5 படகுகளும் எங்கே?

புதுடில்லி, ஜூன் 5

பாக்கு நீரிணையில் வைத்து இந்திய மீனவர்கள் 30 பேரையும் அவர்களின் 5 படகுகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நேற்று முன்தினம் பிடித்துள்ளனர் என்று தகவல் வந்திருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

பிடிக்கப்பட்ட மீனவர்கள்

[5ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறிய 4 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் வேறு மாவட்டங்களில் குடியேறும்

கொழும்பு, ஜூன் 5

வடக்கு -கிழக்கின் எல்லைப்புற மாகாணங்களில் இருந்து வெளியேறிய 4 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் மீளக்குடியேற விரும்பாததால் அந்தக் குடும்பங்கள் வேறு 12 சிங்கள மாவட்டங்களில் குடியேற்றப்படவிருக்கின்றன. இவர்களைக் குடியேற்றுவது சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் குடியேறிய சிங்களக் குடும்பங்களில் ஆறாயிரம் குடும்பங்கள் தற்போது அங்கிருந்து வெளியேறி வேறு மாவட்டங்களில் வசித்து வருகின்றன.

இந்தக் குடும்பங்களில் நாலாயிரம் குடும்பங்கள் மீண்டும் அப்பகுதிகளில் குடியேற மறுத்து விட்டன. அவர்களை வேறு மாவட்டங்கள் பன்னிரண்டில் குடியேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் நாலாயிரம் ரூபா விசேட நிவாரணக் கொடுப்பனவாகவும், மேலதிகமாக வீடு கட்ட 15 ஆயிரம் ரூபாவில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா வரை கடனும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதே நேரம் வேறு மாவட்டத்துக்குச் செல்ல விரும்பாத 1,500 குடும்பங்கள் குறித்தும்-

(5 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் துறை

## பிரிட்டிஷ் நிபுணர்கள் இருவர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 5

யாழ். பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் துறையை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடுகளைச் செய்ய இரண்டு பிரிட்டிஷ் நிபுணர்கள் நாளை இங்கு விஜயம் செய்ய இருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் தென் மேற்கு பிராந்திய கம்பியூட்டர் தொகுதிகளின் இயக்குநர் பேராசிரியர் ஜோன் சிலேற்றர், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜொனாதன், டாபி ஆகியோரே இந்த இருவரும் ஆவர். இவர்கள் நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக் கழகத்துக்கு வருகை தருவர். இவர்களுடன் பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி திரு. ஜோன் பெயினும் வருகை தருகிறார்.

யாழ்ப்பாணம் காடிவ் பல்கலைக் கழகங்களின் கம்பியூட்டர் துறைகளை இணைக்கும் திட்டமொன்று யாழ் பல்கலைக் கழகத்தின் பிரதான கோரிக்கையாக இவர்கள் முன் வைக்கப்பட இருப்பதாகப் பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திட்டம் அமுலாக்கப்படின் யாழ்ப்பாணம் பல்க

[5ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

05 - 6 - 90

செவ்வாய்க்கிழமைவைகாசி 22

சுபநேரம்!

10.22 - 11.52

இராகுகாலம்

2.52 - 4.22

## பரந்தனில் இரு வாரங்களில் குளோரின் உற்பத்தி

### கூட்டுத்தாபன தலைவர் தகவல்

கொழும்பு, ஜூன் 5

பரந்தன் இராசயனத் தொழிற்சாலையில் இன்னும் இரண்டு வாரங்களில் குளோரின் உற்பத்தி ஆரம்பமாகும்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன தலைவர் உபாலி த சில்வா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அடுத்த இரண்டு மாதங்களில் கோஸ்டிக் சோடா மற்றும் ரசாயனப் பொருள்களை தொழிற்சாலை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிடும்.

ஆரம்பத்தில் மாதம் ஐந்து மெட்ரிக் தொன் குளோரின் உற்பத்தி செய்யப்படும். இது உள்ளூர்ப் பாவனைக்குப் போதுமானது என்றும் அவர் சொன்னார்.

பரந்தன் இரசாயனத்

[5ஆம் பக்கம் பார்க்க]

## கலைப்பீட விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இது இவ்வாறிருக்க புதிய மாணவர்கள் ஆகஸ்டு மாதத்தில் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-3)

யாழ். மக்களுக்கு
புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான
கலர் பிலிம் கழுவுவதற்கு
COSMOS MARKETING
SERVICES
1st Floor,
337, Kasthuriar Road,
Jaffna.
[சி-4671]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறாம் டின் ரூ 150.00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

Typewriters: புதிய தமிழ் ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [Samy & Co Shabra அருகாமையில்] (C/4643)

### காணி விற்பனைக்கு

நல்லூர் செம்மணி வீதி ஓரம் கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக தென்னைகள், மாக்கள் உள்ளடக்கிய 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல. 712 C/O உதயன். (3746)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

கறுப்பு (வரி) (பிலிமத்) சேவல்குஞ்சுகள் வான்கோழிக் குஞ்சுகள் 5-6-90, 6-6-90 திகதிகளில் விநியோகிக்கப்படும். இல-9 கந்தையா ஒழுங்கை சுன்னாகம் [புகையிரத நிலையத்துக்கு அருகில்] (3754)

### துர்க்கா திருமண சேவை

எல்லா சாதி, சமயங்களிலும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம் புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளும் நாள் ஞாயிற்றுக்கிழமை முகவரி துர்க்கா திருமண சேவை வளர்மதி இல்லம், கே. கே. எஸ். றோட், மல்லாகம். (3734)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Shabra - Samy & Co அருகாமையில்] (C/4644)

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்-புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### [ஆண்டு 4] பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடிப்படையாக [4ஆம் ஆண்டு அரையாண்டு பாடத்திட்டத்திற்குள்] 10-6-90 ஞாயிறு மு.ப 1.30 பி.ப 10.00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம். கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3741)

### மணமகள் தேவை

அரச உத்தியோக இந்து வேளாள 36 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய் குற்றமுள்ளவர் முழுவிபரங்களையும்முதல்கடிதத்தில் தரவும் 29, வயதில் தங்கையும் உண்டு. C/o No:137 உதயன். (13195)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம், முதலான மாந்திரீக விடயங்கட்கும் நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, [யாழ்/ இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக] யாழ்ப்பாணம். வியாழக்கிழமை விடுமுறை. [3751]

### தேவை

30 40 வயதிற்கிடைப்பட்ட ஆண் காசாளர் இருவரும் 25-35 வயதுகிடைப்பட்ட ஆண்/பெண் கணக்காளர் இருவரும் அனுபவம் வாய்ந்த சமையல்காரர் மூவரும் பரிமாறுவோர் மூவரும் தேவை பழக விரும்புவோரும் தேவை தொடர்பு: கிறில் சைனீஸ் இன், 181, பலாலிறோட், கோண்டாவில். (3756)

பிறேஸியர் நவீன ஆடைகள் தைப்பதற்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. யாழ். மாநகர சபைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது தொடர்பு: வி இல — 135 மே / பா உதயன் யாழ்ப்பாணம். (13331)

### போட்டோஸ்ரட்

உங்கள் தேவைக்கேற்ப சிறியதை பெரிதாக்கியும் பெரியதை சிறிதாக்கியும் கொடுப்பதில் தரமான பிரதிகளை வேண்டிய அளவுகளில் ஒரு நிமிடத்தில் செய்து கொள்ள நாடுங்கள் பிக் பென்ஸ் "B", கண்டிவீதி, கிளிநொச்சி சிங்கர் கொம்பனி முன்பாக. (13184)

### தேவை

ஸ்ருடியோ வேலையில் பயிற்சி பெறவிரும்பும் பெண்கள் 12 - 6 - 90க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். A/L படித்த யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கொழும்பு ஸ்ருடியோ 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-4675)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### 1000 வெள்ளிப் பதக்கம் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு "யாழ்ப்பாணப் பல்கலைக்கழக" இலட்சினை பொறிக்கப்பட்ட வெள்ளியலான 70x55 செமீ. அளவுடைய நீள்வட்ட வடிவான 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இலட்சினை மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக் கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் சகல விபரங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ. 150/- காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திர தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "வெள்ளிப் பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்" எனக் குறிக்கப்பட்டு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15 - 06 - '90 காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படியாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கேள்விகள் 15 - 06 - 90 முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்

[சி-4662]

## கல்விக் கண்காட்சி

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி கல்விக் கண்காட்சி நடைபெறும்.

தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. தனஞ்சயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (இ-74)

## தென்மராட்சியில் முதலுதவிப் பயிற்சி

சாவகச்சேரி ஜூன் 5

பொதுமக்களின் நன்மை கருதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி சுகாதாரப் பிரிவு இப்பிரதேசத்திலுள்ள 16 வயதுக்கு மேற்பட்டோருக்கு முதலுதவிப் பயிற்சியளிக்க முன்வந்துள்ளது.

முதலாவது பயிற்சி கச்சாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 இடங்களில் இம் முதலுதவிப் பயிற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (இ-31)

## கல்விச்சுற்றுலா

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர்கள் 50 பேர் தமது ஆசிரியர்களுடன் 5 நாள் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சனியன்று புறப்பட்ட இவர்கள், இச்சுற்றுலாவின் போது தம்புலை, சிகிரியா, மிகுந்தலை, மாத்தளை, கண்டி, கொழும்பு முதலான இடங்களுக்குச் செல்வார்கள். (இ-31)

## சிவப்பு இல்லம் முதலிடம்

சின்னப்பூவரசங்குளம்அ.த.க. பாடசாலை வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் சிவப்புஇல்லம்முதலாம் இடத்தையும், மஞ்சள்இல்லம் இரண்டாம் இடத்தையும், நீல இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## ஜெறோம் அருள் ஷைலேந்திரா

அன்னையின் மடியில்: 06 - 01 - 1981  ஆண்டவர் அழைப்பில்: 05 - 06 - 1989

கண்களில் இருந்து மறையாத
கதிரவன் போன்ற தங்க மகனே! அருள் ஷைலே!
பன்னிரு மாதங்கள் சென்றதைய்யா
இனிய மகனே நீ எங்கு சென்றாய்?
ஆண்டு பலவானாலும் அழுது நெஞ்சம் ஓயாது!
அன்னையுள்ளம் தவிக்குதய்யா!
ஆறுதல் கூற நீ இல்லாமல் தந்தை நெஞ்சம் வெடிக்குதய்யா!
உன் முகம் காணாமல் அன்பு அக்கா அருமை தம்பி சோர்ந்து விட்டனர்
உன் சொந்தம் விட்டுப் போனதென்று எம் நினைவை
இருளாக்கி இதயத்தை புண்ணாக்கி காலனவன்
சரம்பற்றி காற்றோடு கலந்தாயோ?
எண்ண எண்ண எம் இதயம்
இடிவிழுந்து சிதறுதைய்யா எப்பிறப்பில்
இனி நாங்கள் உன் தங்க முகத்தை காண்பதய்யா?
நீ மீண்டும் எங்களிடம் திரும்பி வரவேண்டும் என்று ஆண்டவனை வேண்டி நிற்கும்:

அன்பு அப்பா, அம்மா, அக்கா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், அன்ரிமார், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள்.


அயித்தாம்புலம்,
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (13192)

## பழைய பத்திரிகை விற்பனைக்கு

பழைய பத்திரிகை விற்பனைக்கு உண்டு. உங்கள் விலையைக் குறிப்பிட்டு 08 - 06 - 1990 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவுசெய்யப்படுபவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர்.

முகாமையாளர் (நிர்வாகம்),
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கனகசபை தனபாலசிங்கம் (செட்டி)

தோற்றம்: 06 - 09 - 1951  மறைவு: 30 - 05 - 1985

திதி: 05-06-1990


எங்கள் அன்புச் செல்வமே நீ
பிரிந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது!

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ம்மா, அக்காமார், அத்தான், தம்பி, மச்சாள், மக்கள், மருமக்கள்.

துர்க்கா இல்லம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (3693)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி  16ஆம் மாத நினைவஞ்சலி





### அமரர் இராஜரட்ணம் இராஜசவுந்தரலிங்கம்

உதவி ஆலை முகாமையாளர்
வாழைச் சேனை கடதாசிக் கூட்டுஸ்தாபனம்

தோற்றம்: 10 - 06 - 1930  மறைவு: 06 - 05 - 1990

### இராஜசவுந்தரலிங்கம் கிரிதரன் (கப்டன் ரவிராஜ்)

தோற்றம்: 21 - 11 - 1968  மறைவு: 06 - 02 - 1989

எங்கள் அன்பு அப்பாவே!
அன்பு செலுத்தி அரவணைத்து
எம்மை தாலாட்டி சீராட்டி
என்றும் எம்மை குழந்தையாக்கி
எம்முடன் இருந்தீர்கள்
இன்று எங்கு ஓடி மறைந்தீர்கள்?

எங்கள் அன்பு மகனே! தம்பியே!
நாட்டிற்காக களத்தில் போரிட்டாய்
வெற்றிகள் பல கண்டாய்
வீரனாய் புகழுடன் மறைந்தாய்


இனி எப்போது அப்பா
உங்களையும் கிரியையும் காண்போம்?
எம்மை தனியே அழ வைத்து விட்டு
மகனின் நினைவுடன் மகனிடமே போய்விட்டீர்கள்
நாம் உங்கள் நினைவுடன்
உங்களை நினைத்து கலங்குகிறோம்

உங்கள் பிரிவினால் வாடும்;

திருமதி சி. இராஜசவுந்தரலிங்கம்,
இ. உஷா,
இ. லிங்கேஸ்வரன்.

அச்சுக் கூட ஒழுங்கை,
கொக்குவில் [illegible]
கொக்குவில். [13196]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர். கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னாள் யாழ். மாவட்ட தொலைத் தொடர்பு பொறியியலாளர்)

தோற்றம்: 17 02 - 1940  மறைவு: 21 - 05 - 1986

திதி:- 05 - 06 - 1990

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தந்தையே! நீங்கள் எம்மை பிரிந்து இன்றுடன் நான்காண்டு பூர்த்தியாகிவிட்டாலும் உங்கள் அன்புமுகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வேல் அகம்"
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி,
T.P NO: 96. (3590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்
பலர்நாண நீத்தக் கடை

**பொருள்:**

அஞ்சவேண்டா என்று அன்று உறுதி கூறியவர் இன்று பலரும் நாணும்படியாக நம்மைவிட்டுப் பிரிந்தால், அதனால் அலருக்கு நாணியிருக்க முடியுமா?


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 2288

05 - 06 - 1990    த. பெ இலக்கம் 25


## மனிதனே இயற்கையைக் காப்பாற்று!

இன்று உலகச் சுற்றாடல் தினம். ஐக்கிய நாடுகள் சுற்றாடல் திட்டத்தின் அனுசரணையுடன் உலகின் எல்லாப் பகுதிகளிலும் அது அனுஷ்டிக்கப்படுகிறது. அனேகமாக சகல நாடுகளிலும், சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு, சுற்றாடலைப் பாதுகாத்துப் பேணுவதன் அவசியம் மக்களுக்கு வலியுறுத்தப்படுவது கடந்த பல வருடங்களாக வழக்கமாகிவிட்டது.

இலங்கையிலும் சுற்றாடல் தினம் கடந்த சில வருடங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இம்முறை வடக்கு—கிழக்கு மாகாண சபையும் இது விடயத்தில் கூடிய கவனம் எடுத்து, தமிழ்ப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகள் தமது பகுதிகளைத் துப்புரவாக வைத்திருந்து, அந்தந்தப் பகுதிச் சுகாதாரத்தைப் பேணுவதுடன், சுற்றாடலைப் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்துள்ளது.

சுற்றுப்புறச் சூழலைப் பேணுவது கிராம மட்டத்தில் இருந்து எழ வேண்டும். கிராமம், நகரம், நாடு, தேசம், சர்வதேசங்கள் என்ற ஒவ்வொருமட்டத்திலும் சுற்றாடல் பாதிப்புறாமல் பார்த்துக் கொள்வது அவசியம்

நாம் வாழும் பூமியின் இயற்கைத் தன்மை, அதன் சமநிலை பேணப்பட வேண்டும். அது கெடுக்கப்பட்டால், குழப்பப்பட்டால், பாதிக்கப்பட்டால், பல அழிவுகளை—பிரளயங்களை — எதிர்நோக்க வேண்டிவரும்.

பூமியின் இயற்கைச் சமநிலை, அதன் பௌதீகக் கூற்றியல், இரசாயனக் கூற்றியல், என்பவற்றில் சிறு மாற்றம் ஏற்பட்டால் கூட அல்லது ஏற்றத்தாழ்வு உண்டாகி விட்டால் உலகின் கண் வாழும் சீவராசிகளுக்குப் பல பாதிப்புகள் உண்டாகும். சில சந்தர்ப்பங்களில் அழிவையும் தவிர்க்க முடியாமற் போய்விடும்

பூமியின் இயற்கைத் தன்மை, அதன் சமநிலை, கூட்டியல் சற்றும் பிறழாமல் உரியபடி இருப்பதற்கு பூமியும் அதன் சுற்றுப்புறச் சூழலும் மாசுபடாமல், மாற்றமுறாமல் கூற்றியற் பாகங்கள் அவை அவற்றுக்குரிய பரிமாணங்களில், வீதங்களில் இருக்க வேண்டியது அவசியம். மிகக் குறிப்பாக நீர், நிலம், ஆகாயம் ஆகிய மூன்றையும் மாசுறாமல், பௌதீகக் கூற்றியலும், கூட்டியலும் பிறழாமல், கூடிக்குறையாமல், பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

நாம் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு நோய் நொடி இல்லாமல் சுகதேகிகளாக இருக்க வேண்டியது இன்றியமையாதது. அதுபோலவே பூமியும் தனது ஆரோக்கியத்தை இழக்காமல், இயற்கைத் தன்மையில் மாற்றம் ஏற்படாமல் திடகாத்திரமாக இருக்க வேண்டும்

இந்த உணர்வு ஒவ்வொரு தனி மனிதனிடமும் பிறக்க வேண்டும். அப்போது தான் அது ஊரில், கிராமத்தில், நகரத்தில், நாட்டில், சர்வதேசங்களில் பரிணமித்து பூமியையும், அதன் சுற்றுப்புறச் சூழலையும் பேண ஏதுவாக அமையும்.

கடலில் எண்ணெய்க் கழிவுகள், இரசாயனக் கழிவுகள் சர்வதேசப் பிரச்சினை. வளி மண்டலத்தில் ''ஓசோன்'' மண்டலம் ஓட்டை விழும் அளவுக்கு நவீன விஞ்ஞான விளைவுகளும் பெரும் இயற்கைப் பிரச்சினை. நிலத்தில் வனாந்தரம் அங்குள்ள மரங்கள்,மிருகங்கள், பறவைகள் அழிக்கப்பட்டு சூழலியல் பாதிக்கப்படுகிறது. அதன் ஒரு பாதக விளைவு மழை குன்றி வரட்சி மிகுந்து உயிரினங்கள் முழுவதுமே பாதிக்கப்படுகின்றன. —இவை சில உதாரணங்களே.

நாடுகளில், கைத்தொழில் வளர்ச்சியால், தொழிற்சாலைக் கழிவுகளால் நீர் நிலைகள் ''நஞ்சா''கின்றன. அளவுக்கு மிஞ்சிய நீர்ப்பாவனையால் அது உவராகிறது. திட்டமிட்ட பயிர்ச்செய்கை இல்லாததால் மண்வளம் கெடுகிறது. சட்டவிரோதமாகவும் கட்டுப்பாடு இன்றியும் மரங்களைத் தறிப்பதால் மழை வளம் அறவே இல்லாமல் அற்றுப் போகிறது. விறகாக மட்டும் 90 லட்சம் மெட்றிக் தொன் மரங்கள் வருடாந்தம் இலங்கையில் எரிந்து சாம்பராகின்றன என்றால் பாருங்களேன்!—இவையும் சில பொது உதாரணங்கள்.

தமிழ்ப் பகுதிகளில் மரங்கள் கண்டபடி வெட்டப்படுகின்றன. காடுகள் கணக்கின்றி அழிக்கப்படுகின்றன மழைவளம் குன்றுகிறது நீர் நிலைகள் உவராக மாறுகின்றன. தண்ணீரில் அளவுக்கு அதிகமான சுண்ணாம்பு —இவை நமது பிரதேசத்துப் பிரச்சினைகள் சில.

சுற்றாடலைப் பேணுவது சுகாதாரத்தைப் பேணுவது மட்டுமல்ல. இயற்கையையும் அதன் சூழலையும் பேணுவது. அதற்கு வகைசெய்யும் உள்நாட்டுச் சட்டங்கள்; சர்வதேச சட்டங்கள் அவசியம். அவற்றைக் கைக்கொள்ளும் கடமைப்பாடு எல்லோருக்கும் உணர்வு பூர்வமாக — ஓர் எழுச்சியாக — மலரவேண்டும்.

இன்றைய தினத்தில் உலகத்தின் ஒவ்வொரு பிரசையும் அதனை மனதில இருத்தி, வருடம் முழுவதும் செயலில் காட்ட வேண்டும். அதாவது—

ஏ மனிதனே! இயற்கையைக் காப்பாற்று! என்பது தான்.

★ மாணவர் அனுமதி குறைப்பு ★ நிதிவெட்டு

# கிழக்குப் பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு முன் நடவடிக்கையா?

### ஊழியர் சங்கக் கூட்டத்தில் தலைவர் சாடுகிறார்

மட்டக்களப்பு ஜூன் 5

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மூடுவிழாவுக்கு இது முன் நடவடிக்கையா? இதற்கு எதிராக சகல தரப்பினரும் உயர் கல்வி அமைச்சுக்கு கட்டாயக் குரல் எழுப்ப வேண்டும்.

கிழக்குப்பல்கலைக்கழக கல்வியணிசாரா ஊழியர் சங்கத்தின் 5 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய சங்கத்தலைவர் திரு. எம். வர்ணகுலசிங்கம் இவ்வாறு கேட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக பொது மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில்;

கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட இவ்வாண்டு 60 லட்சம் ரூபா குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தை விட இவ்வருடம் செலவுகள் அதிகம் என்று அரசுக்கு அறிவித்திருந்தபோதும் நிதி வெட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி மாணவர் அனுமதியும் இவ்வாண்டு குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 194 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் ஆனால் இவ் வருடம் 151 மாணவர் தான் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கான காரணம் என்னவென்று எமக்குப் புரியவில்லை. இது திட்டமிட்ட புறக்கணிப்பா அல்லது பல்கலைக்கழகத்தை மூடிவிடுவதற்கான முன்நடவடிக்கையா?

இப்படி அவர் கேட்டார்.

வைபவத்தில் பிரதம அதிதியாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் கலந்து கொண்டார். [இ-121]

## முல்லைத்தீவு: உலக சூழல் விழா

உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு அதன் இறுதி நாளான இன்று 5ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் விழா நிகழ்ச்சி ஒன்றும் பொதுக் கூட்டமொன்றும் நடைபெறும்.

முல்லைத்தீவு மாவட்ட சுற்றாடல் முகவர் நிலைய செயலாளரும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. பி. பரம்சோதியின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் முல்லை மாவட்ட சுற்றாடல் முகவர் நிலையத்தவரும், மாவட்ட ஆணையாளரும், அரசாங்க அதிபருமான திரு. கே. பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை சுற்றாடல் சூழல் காப்பும், அபிவிருத்தியும் என்னும் தலைப்பில் விசேடஉரையாற்றுவார். (ப - 7)

### தற்காலிக அதிபர்

நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபர் க. மயில்வாகனம் இளைப்பாறியதை தொடர்ந்து தற்காலிக அதிபராக திரு ச. ராஜா நியமிக்கப்பட்டுள்ளார். (இ-72)

## வடக்கு-கிழக்கு ஆலயங்களின் புனரமைப்பு வேலைகளுக்கு நிதி

பட்டிருப்பு ஜூன் 5

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள வழிபாட்டுத் தலங்களின் புனரமைப்பு வேலைகளுக்கு போதிய நிதி உதவி வழங்கியுள்ளதாக வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கலாசார உதவிப் பணிப்பாளர் திரு. செ. எதிர்மன்னசிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த - ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், வற்றாப்பளை அம்மன் கோயில், தண்ணீரூற்று ஊற்றங்கரையாள் ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானம், முள்ளியவளை கலியாண தேவர் ஆலயம் ஆகியவற்றிற்கு, 1,74,950 ரூபாவும் –

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமலை மூசைதீன் ஜும் ஆமஸ்லித், செல்வநாயகபுரம் புனிதவளத்து அந்தோனியார் தேவாலயம், பலாத்தோட்டம் அன்னை வேளாங்கண்ணி தேவாலயம், கும்பத்துமால் கருமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கு 1,70,500 ரூபாவும்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடா முத்துமாரியம்மன் ஆலயம், மட்டக்களப்பு ஸ்ரீ சித்தாமணிப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு 53,415 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (இ 121)

## மருதங்கேணியில் 900 ஏக்கர் அரச காணி பகிர்ந்தளிக்கப்படும்

யாழ்ப்பாணம் ஜூன் 05

காணி அற்றவர்களுக்கு மருதங்கேணிப் பகுதியில் 900 ஏக்கர் அரச காணி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காணி அற்றவர்களுக்கு காணி வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக யாழ் மாவட்டத்தில் உள்ள நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக மருதங்கேணிப் பகுதியில் காணி வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

தென்னை, சயூ பயிர் செய்கைக்காகவே இந்தக் காணிகள் வழங்கப்பட உள்ளன என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (இ-3)

### சமய நிகழ்வில்

## கேதீச்சர ஆலய தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 5

வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கேதீச்சரப் பெருமான் ஆலய இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலையும் தீர்த்தோற்சவம் நாளை புதன்கிழமையும் நடைபெறும். (இ-7)

# நெப்போலியனது வெற்றிகளுக்கு பாடசாலைப் பயிற்சி காரணம்

### விளையாட்டு விழாவில் சமாதான நீதிவான்

யாழ்ப்பாணம், ஜூன் 5

'பிரெஞ்சுத் தளபதியும் அத்தேசததின் மாபெரும் தலைவனுமாக விளங்கிய நெப்போலியன் போனபாட் வாட்டர்லூ போர்க்களத்தில் பெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது. 'ஈட்டன்' 'கரோ' என்ற பாடசாலை விளையாட்டு மைதானங்களில் அவர் இளமையில் பெற்ற பயிற்சிகளே.

சாரணியத்துடன் ராணுவப் பயிற்சியையும் மாணவப் பராயத்தில் பயிற்றுவிக்கும் பாடவிதானம் ஜப்பானில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சுயநிர்ணய ஆட்சியை எமக்கெனப் நிறுவப் போராடும் தமிழர்களாகிய நாம் ஏன் இந்த முறையைப் பின்பற்றக் கூடாது?

யாழ். மாவட்ட சமாதான நீதிவானும், சுன்னாகம் முன்னாள் பிரஜைகள் குழுச்செயலாளருமான திரு. மா. செல்வராஜா (சித்தியார்) மேற்கண்டவாறு கூறினார்.

சூராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழகம் தனது தசாப்த ஆண்டு நிறைவை முன்னிட்டு அண்மையில் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியை நடத்தியது.

யாழ் பாட்டா நிறுவன முகாமையாளர் திரு. றெஜினோல்ட்போல் தலைமையில சழகத் தலைவர் திரு ஞா. பாக்கியநாதர், திரு. பொ. கந்தசாமி ஆகியோர் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

திரு. எம். ஜே. நவரத்தினம், திரு பி கணேசலிங்கம் பாடசாலை அதிபர் திரு. சி. சிவஞானம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. செல்வராஜா மேலும் பேசியதாவது:-

'உடல் உறுதியே உளவுறுதி. ஆரோக்கியமான உடலில்தான் உறுதியான உள்ளம் வளரும். இதற்கு உடற்பயிற்சி முக்கியம். இதனால் மன ஒழுங்கு, சுய கட்டுப்பாடு, ஒரு குழுவின் நன்மைக்காகச் செயற்படுதல். ஒரு குழுத் தலைவனின் வழி காட்டுதலுக்கு உட்படுதல்போன்ற முக்கிய விடயங்களை நடைமுறையில் கற்று நன்மைகளையடையலாம்'.

பாடசாலைகள் வளர்ந்தோரின் விளையாட்டுப்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து மாகாண, அகில இலங்கை ரீதியில் பெயரெடுப்பதில் மட்டும் கவனம் செலுத்தக்கூடாது. குழந்தைகளது விளையாட்டுக்களிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

உடற்பயிற்சி ஆசிரியர் திரு. அ. தம்பித்துரை கழகக் கொடியை ஏற்றினார்.

வெற்றி பெற்றோருக்கான பரிசுகளை திருமதி பரமேஸ் செல்வராசா வழங்கினார். (இ-ப)

## நாணய மாற்று விகிதம்

01-06-1990

இலங்கை மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.94 | 231.90 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.40 | 4002.60 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6698.11 | 6739.91 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2343.03 | 2373.15 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 690.84 | 706.35 |
| 100 | ஜப்பானிய யென் | 26.[illegible] | 2[illegible].[illegible] |

## வன்செயல்களில் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு அலவன்ஸ், உணவு முத்திரை

கொழும்பு, ஜூன் 5

தீவிரவாத வன்செயல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அலவன்ஸும் உணவு முத்திரையும் பெறத் தகுதியானவற்றிற்கு அவை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான விவரங்களைச் சேகரித்து அனுப்பும்படி சகல மாகாண சபைகளும் பணிக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் சமூக நலன் துணை அமைச்சர் சமந்தா கருணாரத்தின தெரிவித்தார்.

கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளாக இடம்பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களே இப்படி சேகரிக்கப்படுகின்றன.

இவ்விவரங்கள் கிடைத்தவுடன் அலவன்ஸ், உணவு முத்திரை வழங்குவதுபற்றிய மதிப்பீடு தயாரிக்கப்படும் என்று துணை அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

## நெடுங்கேணி கடைகள்

நெடுங்கேணி, ஜூன் 05

நெடுங்கேணியில் சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூட வேண்டும் எனவும் இதனை மீறுவோர் வர்த்தகர் சங்கத்தின் நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் எனவும் சங்கத் தலைவர் திரு- ஏ. கே. செல்வரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சங்கக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ப–108)

## சாரதி அனுமதி பத்திரம்

கொழும்பு ஜூன் 5

புத்தக வடிவிலான சாரதி அனுமதிப் பத்திரங்களுக்குப் பதிலாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரம் மேலும் 3 மாதங்களுக்கு செல்லுபடி ஆகும்.

அதாவது, ஏற்கனவே வழங்கப்பட்ட 3 மாதச் செல்லுபடி கொண்ட இப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்குசெல்லுபடி ஆகும். (இ-ப)

## நிவாரணம்

புங்குடுதீவு, ஜூன் 5

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள புங்குடுதீவுப் பகுதிக்கான நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த 26 ஆம் திகதி இப்பகுதியின் ஒருகிராம சேவையாளர் பிரிவுக்கான உற்பத்தித் திறன் முயற்சி நிவாரணமான நாலாயிரம் ரூபா யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளை மூலம் வழங்கப்பட்டது. ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் விரைவில் இப்பணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. [இ-ரி]

## வாசகர் திருமுகம்

### வசதியுள்ளோருக்கு மட்டும்தானா குடிநீர்?

புங்குடுதீவில் பவுஸர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் இப்பகுதி மக்களின் குடிதண்ணீர்தேவை முழுமையாகத் தீர்ந்தபாடில்லை.

பவுஸர்களின் சேவை அறிமுகமான புதிதில் இத்தீவின் மூலை முடுக்கெல்லாம் சென்று சிறப்பாக நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் இப்போது வசதிபடைத்தோரது வீடுகளில் உள்ள தொட்டிகளை நிரப்புவதையே முக்கிய பணியாக இவை மேற்கொண்டு வருகின்றன,

இது இவ்வாறிருக்க, குடிதண்ணீர் தேவைப்படும் வறிய மக்கள் இப்பவுசர்களை எதிர்பார்த்து கையில் பாத்திரங்களுடன் வீதியோரங்களில் கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது. நீர் கொண்டு வரும் இவற்றை வழியில் மறித்தால் வேறொரு ''ஓடருக்கு'' கொண்டு செல்கிறோம் என்ற பதில்தான் கிடைக்கிறது. இந்த நிலை எப்போது மாறும்?

ஆயினும், வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப செயலகத்தின் கீழ் தண்ணீர் விநியோகம் செய்து வரும் இரு பவுஸர்கள் வேறுபாடின்றி குடி தண்ணீர் வழங்கி வருகின்றன. இவற்றின் சேவை பாராட்டப்படக்கூடியது.

கே. ரி. ராஜ்
புங்குடுதீவு.

## செய்திக்கொத்து

### மகளிர் குழுக்களுக்கு ரூ. 5 லட்சம்

பட்டிருப்பு ஜூன் 5

மட்டக்களப்பு மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாட்டை ஊக்குவிக்க மகளிர் குழுக்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

மகளிர் குழுக்களுக்கு பனை வேலைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் புனர்வாழ்வு நிதியிலிருந்து ஊக்குவிப்பு சுடன் வழியும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் உற்பத்திப் பொருட்கள் மட்டக்களப்பு மாவட்ட பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு மட்டுநகர் கற்பகம் விற்பனை நிலையத்திற்கு வழங்கப்படும்.

### தெங்கு பனம் பொருள் சங்கங்களின் சமாஜம்

பட்டிருப்பு ஜூன 5

மட்டக்களப்பு - மாவட்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜமொன்று அண்மையில் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (இ-121)

### உபதபால்நிலையத்தில் பெயர் பலகைத்திருட்டு

புங்குடுதீவின் வல்லன் பகுதியிலுள்ள உபதபால் நிலையத்தில் பெயர்ப்பலகைக்கு பதிலாக உபதபால் நிலையபெயர் எழுதப்பட்ட கடதாசி அட்டை காணப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன் சில விஷமிகள் பெயர்ப்பலகையைத் திருடிவிட்டனர். இது பற்றி புங்குடுதீவு - பிரதான தபால் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

### ஆஸ்பத்திரியில் சிரமதானம்

பழுகாமம் அரசினர் ஆஸ்பத்திரியில் அண்மையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் சிரமதானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஆஸ்பத்திரி கட்டடமும் சுற்றாடலும் இச்சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படனர். [இ-ரி]

## கண்டதும் கேட்டதும்

பொது இடங்களில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில சைக்கிள் விடும்போது டிக்கெட் ஒன்று வழங்கப்படுகிறது. டிக்கெட்டை வழங்கும்போது சைக்கிள் பாதுகாப்புக்கான பொறுப்பை டிக்கெட் வழங்குபவர் ஏற்கிறார். சைக்கிளை திருப்பி எடுத்துச் செல்லும்போது டிக்கெட்டை ஒப்படைக்க வேண்டும்.

ஆனால் பாடசாலைகளில் உள்ளவை சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அல்ல. அவை சைக்கிள் விடும் நிலையங்கள்.

நகரில் உள்ள பிரபல பாடசாலை மாணவன் ஒருவர் கண்டதும் கேட்டதும் பகுதிக்கு கடிதம் ஒன்றை எழுதி உள்ளார்.

தமது 4000 ரூபா பெறுமதியான சைக்கிளும் தமது நண்பனின் 2500 ரூபா பெறுமதியான சைக்கிளும் அடுத்தடுத்து காணமற் போய்விட்டன. பாடசாலை நிர்வாகம் கைவிரித்து விட்டது என்றும் அந்த மாணவர் கவலை தெரித்துள்ளார்.

பாதுகாப்பு பொறுப்பை ஏற்கமுடியாது என்பதால்பாடசாலை நிர்வாகம் கைவிரித்ததில் ஆச்சரியம் இல்லை.

ஆனால் இந்தச் சம்பவங்கள் தொடர்கதையாகி விடக்கூடாது அல்லவா?

பாடசாலைகளிலும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை ஏற்படுத்துவது குறித்து ஆராய வேண்டும். ஏனெனில் இப்போது மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சைகிள் வைத்திருக்கிறார்கள். அவற்றின் பெறுமதியும் அதிகம்.

இழந்த பெறுமதியான பொருளுக்கு மாற்றுப் பொருள் வாங்கிக் கொடுக்க பெற்றோர்களுக்கு கட்டுபடியாகுவா?

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் த. தனுஜன்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த தங்கத்துரை புனிதவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தனுஜன் இன்று [5-6-90] தமது முதலாவது பிறந்தநாளை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டப்பா (சண்முகம்), பாட்டம்மா (சிவகாமி), அன்ரிமார், சிவா அங்கிள், சாந்தி அத்தை, பெரியப்பாமார், ஆசை அக்கா, (மீரா, நிரோஜா), ஆசை அண்ணா (மயூரன், நிரோஜன்), மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், அண்ணாமார், அன்ராமார் (கவடா), தம்பி (கபில்), சித்திமார், உற்றார், உறவினர் அனைவரும் பத்திரகாளி அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(3804)



# திருமண அழைப்பிதழ்

வரும் பிரமோதூத வருடம் வைகாசி மாதம் 06-06-90 புதன்கிழமை பி. ப. 3.30 மணி தொடக்கம் 5. 30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் **இராஜேந்திரன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **சுகிர்தரஞ்சினி** அவர்களுக்கும் |

நடைபெறவுள்ள திருமணத்திற்கு சுற்றம் சூழ வந்து வாழ்த்தி ஏகுமாறு வேண்டுகின்றோம்;

★ இரு வீட்டார் அழைப்பிதழ் ★

| | |
|---|---|
| மணமகன் வீட்டார்: திருமதி திருநாவுக்கரசு மூத்தவிநாயகர் கோவிலடி, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. | மணமகள்; சி. வேலுப்பிள்ளை செல்லம்மா D. R. O. ஒழுங்கை, தெல்லிப்பழை: |

[13185]



# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்கும், கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L** DAY CLASSES பிரிவு 2 [8.30 — 1.30] ஆரம்பம்: 06 - 06 - 1990

- ★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படும்.
- ★ கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
- ★ இலவசப் பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- ★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

[சி-4595]



# Applications are Called for Short - Term Counselling Training Program

The Association for Health and Counselling calling for applicants who are interested in pursuing an intensive training program in psychological counselling. The training will take place on week-ends and it will be held in English. Preference will be given to residents of Kilinochchi, Vavuniya and Mannar.

Please write or contact

"SHANTHIHAM"
21, First Cross Street,
Jaffna,

for your application form. The closing date for applications is August 31, 1990

Executive Director.

[3640]



# முகாமையாளர் தேவை

வவுனியாவில் உள்ள பிரபல வியாபார நிறுவனம் ஒன்றிற்கு மும்மொழிகளிலும் திறமையுள்ளவரும், ஸ்தாபனத்தைத் திறமையுடன் கொண்டு நடாத்தக்கூடியவருமான அனுபவம் மிக்க ஆண் முகாமையாளர் உடன் தேவை.

சம்பளம் மற்றும் பிணை சம்பந்தமான விடயம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 15-06-1990 வெள்ளிக்கிழமைக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

இல. 138, C/o உதயன்.

(13338)


# ஐ. ஜேர்மனியின் எதிர்காலம் பற்றி புஷ் - கோர்பி கருத்து வேற்றுமை

## வாஷிங்டன் உச்சி மாநாட்டில் இணக்கம் காணப்படவில்லை

வாஷிங்டன், ஜூன் 4

ஐக்கிய ஜேர்மனியின் எதிர்காலம் பற்றி இணக்கம் எதுவும் காணப்படாத நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் - சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் உச்சிமாநாடு முடிவடைந்தது.

கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்து உருவாகும் ஐக்கிய ஜேர்மனியே நேட்டோ இராணுவக் கூட்டில் ஓர் உறுப்பினராக இருப்பதைத் தீர்மானிக்க விட வேண்டும் என்று அதிபர் ஜோர்ஜ்புஷ் உச்சி மாநாட்டில் வலியுறுத்தினார்.

இதனை சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் பலமாக எதிர்த்தார் நடுநிலைநாடாக ஐக்கிய ஜேர்மனி விளங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

அப்படியில்லாமல் நேட்டோவில் ஐக்கிய ஜேர்மனியைச் சேர்க்க நிர்ப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின், அது சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடந்து வரும் ஆயுதக் குறைப்புப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்றும் திரு. கோர்பச்சேவ் எச்சரித்தார்.

கிழக்கு ஜேர்மனி, அங்கு கம்யூனிஸ ஆட்சி இருக்கும் வரை சோவியத் தலைமையிலான வார்ஸோ இராணுவக் கூட்டணியில் இருந்து வந்தது.

அமெரிக்கா சார்பான ஐரோப்பா நாடுகள் நேட்டோ இராணுவ அணியில் அங்கம் வகிக்கின்றன. (எ)

# கடல் கொள்ளையர்களை பிடிக்க துப்பாக்கிப் பிரயோகம்

## சென்னைத் துறைமுகத்தில் சம்பவம்

சென்னை, ஜூன் 4

சென்னைதுறைமுகம் அருகே நடுக்கடலில் பொலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி கடல் கொள்ளைக்காரர்கள் 3பேரை கைது செய்தனர்.

தப்பி ஓடிய 7பேரை வலை வீசி தேடி வருகிறார்கள்.

இதுபற்றி சென்னை நகர பொலீஸ் கமிஷனர் கே கே. ராஜசேகரன் நாயர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடல்கொள்ளைக் காரர்கள் படகுகளிலும், கட்டுமரங்களிலும் வந்து சென்னை துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களில் கொள்ளையடித்து வந்தனர்

அதைத் தடுக்கும் வகையில் சென்னை துறைமுகத்தில் நடுக்கடலில்மிதக்கும் பொலீஸ் நிலையம் சமீபத்தில் திறக்கப்பட்டது.

பொலீஸார் துப்பாக்கி ஏந்திய நிலையில் மிதக்கும் பொலீஸ் நிலையத்தில் ரோந்து சென்று கொள்ளைக்காரர்கள் நடமாட்டத்தைக் கண்காணித்து வந்தனர்.

சம்பவதினம் கடல் கொள்ளைக் காரர்கள் பகல் நேரத்தில் இந்திய சரக்குக் கப்பல் ஒன்றை நோக்கி வந்தபோது மிதக்கும் பொலீஸ் நிலையத்தில் இருந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இப்படி பொலீஸ் கமிஷனர் சொன்னார். (எ)

# ருஷ்டிக்கு கொலை மிரட்டல்; பிரிட்டனில் ஐவர் கைது!

லண்டன் ஜூன் 4

பிரிட்டனில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 5 பேரை பொலீசார்கைதுசெய்தனர்.

பிரபல நாவலாசிரியர் சல்மான் ருஷ்டியை கொலை செய்வதான மிரட்டல் தொடர்பாக இந்த 5 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலீசார் தெரிவித்தனர்.

சல்மான் ருஷ்டி விவகாரம் தொடர்பாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை என்று நம்பப்படுகிறது.

ருஷ்டி எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' என்ற நூல் முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும் விதத்தில் இருந்ததாகக் கூறி கடும் எதிர்ப்பு தெரிவித்து மறைந்த ஈரான் நாட்டு மதத் தலைவர் ஆயதுல்லா கொமெனி ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தார்.

இதையடுத்து சிலகாலமாக ருஷ்டி தலைமறைவாக வாழ்ந்து வருகிறார்.

கைது செய்யப்பட்ட 5 பேர்களில் 4 பேர் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

பொலீசார் லண்டனில் அவர்கள் தங்கியிருந்த இடத்தை கண்டு பிடித்து கைது செய்தனர். (எ)

★ கம்போடியா பிரச்சினை

# யுத்த நிறுத்தம் ஏற்படுவது பற்றி ஜப்பானில் பேச்சு

டோக்கியோ, ஜூன் 04

பதினொரு ஆண்டு காலமாக கம்போடியாவில் இடம் பெற்றது வரும் சிவில் யுத்தம் தொடர்பாக முக்கிய மாநாடு ஒன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இன்று ஆரம்பமானது.

கம்போடியாப் பிரதமர் ஹுன்சென், கம்போடியா கெரில்லாக் குழு ஒன்றின் தலைவர் இளவரசர் சிஹனூக் ஆகியோர் டோக்கியோவில் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றனர்.

கெமரூச் கெரில்லாக் குழுத் தலைவர் டோக்கியோ செல்லவில்லை. காரணம் தெரிவிக்கப்படவில்லை.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் பேச்சுக்களை நடத்தவே இந்த மாநாடு கூட்டப்பட்டு உள்ளது. (எ)

★ இம்மாதம் முதல்

# கோவா மாநிலத்தில் ஆங்கில இனி இல்லை

பனாஜி ஜூன் 4

கோவாவில் 1990 ஜூனில் துவங்கும் கல்வியாண்டில் ஆங்கில மொழி வாயிலான கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கில மொழியில் பிற பாடங்களைப் போதிக்கும் முதல் வகுப்புக்கென மாணவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆரம்பப் பள்ளிகளில் பிராந்திய மொழியே கல்வி மொழியாக இருக்கும்.

ஆங்கில மொழியில் பாடம் போதிக்கும் புதியபள்ளிகளும் துவக்க அனுமதிக்கப்படமாட்டாது.

ஏற்கனவே உள்ள பள்ளிகள் தங்கள் வகுப்புகளை விரிவுபடுத்தவும் அனுமதிக்க மாட்டோம் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

ஆங்கில மொழியில் பாடம் கற்பிக்கும் பள்ளிகளுக்கு அரசு உதவி வழங்காது.

ஆங்கில மொழியில் பாடங் கற்பிக்கும்பள்ளிகள் விரும்பினால் தங்கள் கல்விக் கட்டணத்தை உயர்த்தலாம்.

ஆனால் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்குள் தமது விருப்பத்தை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். (எ)

# பாகிஸ்தானுக்கு 3 மாதத்தில் மிராஜ் விமானங்கள் கிடைக்கும்

இஸ்லாமாபாத் ஜூன் 4

இன்னும் 3 மாத காலத்தில் 50 மிராஜ் விமானங்களைப் பாகிஸ்தானுக்கு ஆஸ்திரேலியா வழங்கும் என்று பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி ஹகிமுல்லா கூறினார்.

மேலும் 45 புதிய என்ஜின்களையும், உதிரி பாகங்களையும் ஆஸ்திரேலியா வழங்கும்

இதன் மூலம் கராச்சியில் மிராஜ் விமானத் தொழிற்கூடம் ஒன்றை நிறுவலாம்.

மேலும் 60 முதல் 70 மிராஜ் விமானங்களையும் [illegible] முடியும்.

எஃப்-16 ரக விமானங்களைக் கூட்டுமுறையில் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று பரிசீலனையிலுள்ளது. இது பற்றி பேச்சு நடத்த நுருக்கி தூதுக் குழு ஒன்று பாகிஸ்தான் வந்துள்ளது என்றும் ஹகிமுல்லா தெரிவித்தார்.

எதிரியினால் ஏற்படக்கூடிய அபாயத்தைச் சமாளிக்கும் நிலையில் பாகிஸ்தான் உள்ளது.

கராச்சி நகரை ஒரு கோட்டை [illegible] காப்போம் என்றும் அவர் [illegible] (எ)

★ பிரிட்டன்;

# சமூக ஜனநாயகக் கட்சியை கலைப்பது என்று அறிவிப்பு!

லண்டன், ஜூன் 4

பிரிட்டனின் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியான சமூக ஜனநாயக்கட்சி கலைக்கப்பட்டு விட்டது.

1981 இல் தொழிற்கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இந்தக் கட்சியை ஆரம்பித்தனர்.

இக்கட்சியின்சார்பில்மூன்று எம்பிக்கள்பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் உள்ளனர்.

கட்சி கலைக்கப்பட்ட பின்னரும் இம் மூவரும் சுயேச்சை சோஷலிச எம்பிக்களாக பணிபுரிவர் என்று கலைக்கப்பட்ட கட்சியின் தலைவர் டேவிட் ஓவன் தெரிவித்தார்.

கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை6 ஆயிரமாக குறைந்து விட்டது.

இந்நிலையில் ஒரு கட்சியை வெற்றிகரமாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது;

இப்படி திரு. ஓவன் சொன்னார். (எ)

# மதுரை பஸ் நிலையத்தில் 25 லட்சம் ரூபா கள்ளநோட்டு

## பொலீஸார் கைப்பற்றினர்

மதுரை, ஜூன், 04

மதுரை பஸ் நிலையத்தில் 25 லட்சம் ரூபா கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன.

அது பற்றிய விவரம் வருமாறு:-

மதுரை கட்டுப்பாட்டுஅறை பொலீஸ் நிலையத்துக்கு இரவு 7 மணிக்கு மர்ம டெலிபோன் அழைப்பு வந்தது.

நவீன சிறப்பங்காடி பஸ் நிலையத்தில் இரண்டு பார்சர்கள் அனாதையாக கிடக்கின்றன. அவற்றில் கள்ள நோட்டுக்கள் உள்ளன என்று போனில் பேசியவர் தெரிவித்தார்.

பொலீஸார் உடனடியாக பஸ் நிலையத்துக்கு விரைந்தார்கள்.

பஸ்கள் வெளியே வரும் வாசல் அருகில் ராஜபாளையம் பஸ்கள் நிற்கும் பகுதியில் நிறுத்தப்பட்டு இருந்த பஸ்களுக்கு இடைப்பட்ட பகுதியில் 2 பார்சல்கள் இருந்தன.

சதுர வடிவில் கட்டப்பட்ட அந்தபார்சல்கள் மீது மெல்லிய சாக்குகளால்கட்டப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.

பொலீஸார் அவற்றைகைப்பற்றி வேனில் ஏற்றுவதற்காக தூக்கினார்கள். அப்போது இரண்டு பார்சல்களுக்கும் இடையில் கடிதம் இருந்தது. கடிதத்தையும் பார்சல்களையும் பொலீஸார் எடுத்துச் சென்றனர்.

கட்டுப்பாட்டு அறையில் வைத்து பார்சல்களைப் பிரித்து பார்த்த போது உள்ளே கள்ள நோட்டுக்கள் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. (எ)

# பிரான்ஸ் அணுவாயுத பரிசோதனை

புதுடில்லி, ஜூன் 4

பிரான்ஸ் சக்திமிக்க அணுவாயுதமொன்றை பசுபிக் சமுத்திர பிரென்சு பொலினீசியாவில் அமைந்துள்ள மரோடா தீவில் வெடித்துப் பரிசோதித்தது.

நேற்று முன்தினம் வெடித்துப் பரீட்சிக்கப்பட்ட இவ்வாயுதம் 15 கிலோ தொன் எடை கொண்டிருந்ததாகவும் ஹிரோஷிமா நகரின் மேல் போடப்பட்ட அணுகுண்டின் தாக்கத்துக்குச் சமனான சக்தியைக் கொண்டது எனவும் பிரெஞ்சு அதிகாரிகள் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

கடந்த 15 ஆண்டுகளின் பின் பிரென்சு அரசு அணுவாயுதப் பரிசோதனை மேற்கொண்டதாக ஒப்புக்கொண்டு தகவல் வெளியிட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். (ப)

# பெனாஸிர் குற்றச்சாட்டு


ராவல்பிண்டி. ஜூன்4

சிந்து மாகாணக் குழப்பங்களுக்கு இந்திய உளவுப் படையினரே காரணம் என்று குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது.

பாகிஸ்தானின் எதிர்க்கட்சியான மொஹாஜிர் குவாமி இயக்கத்தினுள் இந்திய உளவுப் படையினர் ஊடுருவல் செய்திருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ குற்றஞ் சாட்டினர்.

1949 இல் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் பின்னர் இந்தியாவை விட்டு வெளியேறிய உருதுபேசும் முஸ்லிம்களை மொஜாஹிர் குவாமி கட்சி பிரதிநிதித்துவம் செய்கிறது. (எ)


# 4வது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. மா. எட்வின் கந்தசாமி**
(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ஊழியர்)

மலர்வு: 27 - 04 - 1939
உதிர்வு: 05 - 06 - 1986


நான்கு ஆண்டானாலும் ஆறாது எம் துயரம் மாண்டு நீர் போனாலும் தீராது எம் கவலை காணும் இடமெல்லாம் உங்கள் நினைவலைகள் தொடருதப்பா! அன்பிலும், பாசத்திலும். உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே!

தங்களை இந்நாளில் அன்புடன் நினைவு கூருகின்றோம்.
மனைவி, பிள்ளைகள்.
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
உறவினர்கள்.

ராஜி ஸ்ரோர்ஸ்,
ஞானப்பிரகாசர் வீதி,
[illegible]ல்வம்.
உடுவில். (3697)



# 4ஆம் வருட நினைவஞ்சலி



**அமரர். தம்பையா சதாசிவம்**

திதி: 05 - 06 - 1990

எம் உயிருக்குயிரான தந்தையே ! பிறரின் ஊன்றுகோல் இல்லாமலே தனித்து ஆலமரமாய் எம்மைக் காத்து வளர்த்து ஆளாக்கினீர்களே! உங்களை நினைத்திடும் பொழுதெல்லாம் கண்களில் நீர் சொரிகின்றதே! ஆறாதையா, உம்பிரிவு எம் உயிர் உடலில் இருக்கும்வரை தாங்கிக் கொள்ளவே முடியவில்லையே! ஐயா, தெய்வமாய் எம்மைக் காத்து ஆசீர்வதியுங்கள்.

என்றும் உம்பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

41'A' சிவப்பிரகாசம் றோட்,
யாழ்ப்பாணம். (3670)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரத்தில் இன்று தேர்

# சைவநெறித் தொண்டர் கழகம் விசேஷ கடமை ஆற்றுவர்

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று நடைபெறும் தேர் உற்சவத்தில் திருக்கேதீஸ்வர சைவ நெறித் தொண்டர் கழகத் தொண்டர்கள் சேவையாற்றுவார்கள்.

பக்தர்களுக்கு தேவையான உதவிகளை இந்த தொண்டர்கள் வழங்குவார்கள். நாளை நடைபெறும் தீர்த்த உற்சவத்திலும்இந்த தொண்டர்கள் கடமையாற்றுவார்கள்

இந்தக் கழகம் திருக்கேதீஸ்வரம், புதுக்குளம், கோவில் குளம், சிதுவிநாயகர்குளம் ஆகிய பகுதிகளை மையமாகக்கொண்டு பல்வேறு பணிகளையாற்றிவருகிறது.

சமயதீட்சை, பஜனை ஆகிய பணிகளையும் ஆற்றி வருகிறது. (இ-3)

# சட்டவிரோதமாக குடியேறினாலும் காணி

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ் மாவட்டத்தில் அரச காணிகளில் சட்டவிரோதமாகக் குடியேறி இருக்கும் காணி இல்லாதவர்களுக்கு அந்தக் காணி சொந்தமாகக் கிடைக்கும்.

யாழ். மாவட்டத்தில் அரச காணிகளில் 31-12-83 க்கு முன்னர் குடியேறியவர்களுக்கு அவர்கள் வேறு காணி எதற்கும் சொந்தமல்லாதவராகவும் வருமானம் குறைந்தவராகவும் இருந்தால் மட்டுமே அந்தக் காணி சொந்தமாக வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை செயலக காணித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. [ஒ-3

# அனுரா - தினேஷ் இரகசிய பேச்சு!

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

கொழும்பு, ஜூன் 5

கொழும்பில் உள்ள சுதந்திரக் கட்சித்தலைமைக் காரியாலயத்தில் பதில் எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவுடன் நடத்தியதாகக் கூறப்படும் இரகசியப் பேச்சுக்கள் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

அனுரா பண்டாரநாயக்காவுடன் அவரது விசுவாசிகளான சி.வி.குணரத்தின சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் திருவாளர்கள் ஜே. ஆர் பி. சூரியபெருமா ஜினதாஸ நியதபால ஜனாப் ஹலீம் இஷாக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இடதுசாரிக்கட்சிகளுடன் சுதந்திரக்கட்சிகூட்டுஅமைக்க எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தவே அனுரா-தினேஷ் சந்திப்பு இடம்பெற்றதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இடது சாரிக்கட்சிகளுடன் சுதந்திரக்கட்சி கூட்டுச் சேருவதை அனுரா பண்டாரநாயக்கா விரும்பவில்லை என்று தெரிகிறது.

இடதுசாரிக்கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியை மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் விரும்பவில்லையாம். (ஒ-எ)

## கொழும்பில் சொக்கன் பேருரை

கொழும்பு, ஜூன் 5

எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் முதுபெரும் எழுத்தாளர் சொக்கனின் பேருரை இடம்பெற உள்ளது.

'சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர் ஆற்றிய தொண்டு' என்னும் பொருள் பற்றி அவர் பேசுவார்.

இந்த நிகழ்ச்சியை இந்து சமய விவகார அமைச்சு ஒழுங்கு செய்து உள்ளது.

துணை அமைச்சர் திரு. பி.பி தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். (ஒ-எ)

## இன்று தேர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு பத்திரகாளி அம்மன் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது.

அதனை முன்னிட்டு சிறுவர்களுக்கான சமய அறிவுப் போட்டி ஒன்றும் நடத்தப்படுகிறது.

நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஒ)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 5

உலக சுற்றாடல் தினத்தையொட்டிய நிகழ்ச்சிகள் இன்று காலை 8.15 மணிக்கு இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் நடைபெறவிருக்கிறது.

வங்கி முகாமையாளர் திருமதி. துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் மரம் நடுகையும்இடம்பெறும். (ஒ-3]

★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்- பல்கலைக்கழக பௌதிகவியல் மண்டபத்தில் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு லண்டனைச்சேர்ந்த டாக்டர் கிருஸ்தோப்பர் எச்.சி.லயால் இயற்கையியலும் தொல்பொருள்சாலையும் என்னும் தலைப்பில் உரையாற்றுவார். [ஒ-3]

## இந்தியாவுடன் வர்த்தக உறவை இலங்கை பலப்படுத்தும்

கொழும்பு, ஜூன் 5

இந்தியாவுடனான வர்த்தக உறவைப் பலப்படுத்தும்முயற்சியை இலங்கை அரசு எடுத்திருக்கிறது.

இதன் முதற்கட்டமாக இந்திய- இலங்கை கூட்டுப்பொருளாதார ஆணைக்குழுவைக் கூட்ட இலங்கையின் சார்பில் வர்த்தக,வியாபார அமைச்சர் ஏ ஆர், மன்சூர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

''ஆணைக்குழுவின் கூட்டத்தை இம்மாதம் 14,15ஆம் திகதிகளில் கூட்டத்தீர்மானிக்கப்பட்டுள்ளது'' - என்று அமைச்சர் மன்சூர் அறிவித்திருக்கிறார்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும்படி அமைச்சர் மன்சூர் இந்திய அரசுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

## திருடன் ஏமாற்றம்

வீட்டில் பூட்டிநின்ற சைக்கிளைத் தூக்கிச் சென்ற திருடன் பெண்களின் அவலக்குரலைக்கேட்டு சைக்கிளை மறைவான இடத்தில் போட்டுவிட்டு ஓடி மறைந்தான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 12-30 மணியளவில் யாழ்-வண்ணை மேற்கு நாவலடி ஒழுங்கையில் நடைபெற்றது [ஒ-51]

## 4 ஆயிரம் - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை இந்த விடயம் குறித்து எந்த விதபதிலும் தெரிவிக்காத 500 குடும்பங்கள் குறித்தும் அரசு தற்போது ஆலோசனை செய்து வருகிறது [உ-2-3]

## துப்பாக்கி சூடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இப்படிச் செய்தவராவர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து பொலீஸ் விசாரணை நடைபெற்று வருகிறது. [அ-2,3]

## இந்திய- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தீவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது

கடந்த 2 மாதங்களில் இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டது இது நான்காவது தடவையாகும் என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதரகம் இது தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்புகொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது [ஓ எ]

## புலிகள்- அரசு- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை நடைபெற்றது.

அடுத்த வாரம் இரு சாராரும் திருகோணமலைக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வர்.

அந்தந்த மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கப் படைகளுக்கும் இடையில் கசப்பு நிலை உருவாகாமல், இரு சாராரின் பணிகளும் தடையின்றி நடக்க ஏற்பாடு செய்வதே மாவட்டப் பேச்சுக்களின் முக்கிய நோக்கமாகும். (அ-2)

## இராணுவ- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன், மற்றும் புலிகளின் பிரமுகர்களான நியூட்டன், மகான் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள்குறித்து நீண்ட நேரமாக ஆராயப்பட்டு பல முடிவுகள் எடுக்கப்பட்டன. சில இராணுவ முகாம்களை மூடுவது என்பதும் ஒரு முடிவாகும், [அ-உ]

## மாகாணசபையைக்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீக்குவதற்கான சட்டத்தை அரசே கொண்டுவரும் என்று தற்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த விடயம் அமைச்சரவையிலோ அல்லது அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலோ இதுவரை ஆராயப்படவில்லை

''இலங்கை இராணுவம் யுத்த முஸ்தீபு செய்து வருகிறது; இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன'' — என்ற குற்றச் சாட்டை அரசு திட்டவட்டமாக எம்மிடம் மறுத்துள்ளது.

### மோதும் நோக்கம் இல்லை

''விடுதலைப்புலிகளுடன் மோத நாம் தயாரில்லை; அந்த நோக்கமே அரசுக்கு இல்லை'' - இப்படி ஜனாதிபதி எம்மிடம் கூறினார்.

வடக்கு, கிழக்கில் நடப்பது துருப்புகள் மாற்றமே. அங்கு எந்த முகாமிலும் துருப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை என்றும் எமக்குக் கூறப்பட்டது.

''அரசின் மீது சந்தேகப்பட வேண்டாம்; சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து பேணக்கூடியதாக - விடுதலைப்புலிகளும் அரசும் பரஸ்பரம் நம்பிக்கை வைத்து பேசி பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக - செயலாற்ற வேண்டும்'' - என்றும் அரச தரப்பில் கூறப்பட்டது.

இவ்வாறு டாக்டர் பாலசிங்கம் உதயனுக்கு மேலும் கூறினார். (அ-உ)

## பிரிட்டிஷ் நிபுணர்- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக் கழகம் பூரணத்துவமுடைய ஒரு கம்பியூட்டர் துறையைப் பெறும்.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் ஒன்றுடன் சம்பியூட்டர் துறையில் இணைப்பை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளைப் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் கம்பியூட்டர் துறைப் பேராசிரியர்களுடனும், பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தாருடனும் மேற்கொள்ள யாழ் பல்கலைக்கழக கம்பியூட்டர் துறை இயக்குநர் பேராசிரியர் குமாரவடிவேல் கடந்த பெப்ரவரி மாதம் பிரிட்டனுக்கு இரு வார கால விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அப்போதே பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் கம்பியூட்டர் துறையில்யாழ்ப்பாணம் - காடிவ் இணைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு நான்கு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கம்பியூட்டர் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐந்து வருடங்களிலும் வெளிநாட்டு விரிவுரையாளர்களின் உதவி பெறுவதற்கும் விரிவுரையாளரைப் பயிற்றுவித்தலுக்கும் புத்தகங்கள் [illegible] கொள்முதல் செய்வதற்கும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் உதவும். கம்பியூட்டர் விஞ்ஞானத்தை ஒரு கற்கை நெறியாகப் போதிப்பதற்கு ஏதுவாக கம்பியூட்டர் விஞ்ஞானத் துறையை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுயாழ் பல்கலைக்கழகத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. கம்பியூட்டர் விஞ்ஞான கற்கை நெறிக்கு 1992 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென அறியப்படுகிறது.

கம்பியூட்டர் துறையின் தேவைகளுக்காக இரு விரிவுரை அறைகள் கம்பியூட்டர் ஆய்வுகூடங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன

பத்து லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இவ்வேலைகள் அடுத்தமாத முடிவில் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்தியாவசிய உபகரணங்களை கொள்முதல் செய்ய பல்கலைக்கழகம் ஆறு இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது. பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் வழங்கும் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் சுமார் நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான கம்பியூட்டர் உபகரணங்கள் [illegible] சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## பரந்தனில் - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சாலை புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும் அதன் முன்னேற்றம் குறித்துத் தான் திருப்தி கொண்டுள்ளதாகவும் கைத்தொழில் துணை அமைச்சர் எம். எஸ். [illegible]சாமி இச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஒ-எ)

90ஆவது நாளை நினைவு கூருகின்றோம்



சாந்தகுமாரி கனகரட்ணம் சேது

தோற்றம்: 31 - 03 - 1966 மறைவு: 07 - 03 - 1990

சாந்தி! நீ இல்லாத எங்கள் இல்லத்தில் சாந்தியுமில்லை. உன் கலகலப்புக்கள் எங்கள் கண்முன்னே எப்பொழுதும் தோன்றுகின்றன. நீ எங்கள் நெஞ்சங்களில் நீங்காத நினைவுகளை விட்டுச் சென்றாய்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (3807)

திரு. சொக்கலிங்கம் கமலஸ்ரீ
(சத்தியன்)
அவர்களின் நினைவு குறித்த
ஈராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 1961 - 12 - 21 ஆயுதப்பிடியில் 1988 - 05 - 06

முகத்தில் தவழும் சிரிப்பால், பேச்சில் கனியும் இனிமையால், எம்மையெல்லாம் கவர்ந்திழுத்த,- அன்பின் வடிவமே! யோகபுரம் பெற்றெடுத்த சத்தியனே!

அந்த காலைப் பொழுதினிலே அஸ்தமனமாகியதென்ன?

உந்தன் சுவடுவழியே எங்கள் பாதங்கள் அடைந்திடுக சாந்தி

பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர், மைத்துனர், மருமக்கள், உறவினர், நண்பர்கள்,

(சி/4670)

கேள்விப் பத்திர அறிவித்தல்
நீர்ப்பாசனத் திணைக்களம்
யாழ்ப்பாணப் பிரிவு

நீர்ப்பாசன திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவின் கீழ் உள்ள நல்லூர் பூநகரியில் உத்தியோகத்தர் தங்குவதற்கான விடுதி அமைப்பதற்கு, மெழுகு முத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில், ரூபா 150,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கிளிநொச்சிப் பகுதி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப்பத்திர சபைத் தலைவரினால் 1990-06-27 ஆம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1990 - 06 - 06 தொடக்கம் 1990 - 06 - 25 ஆம் திகதி காலை 10.00 மணி வரை பிரதிப் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சிப் பகுதி, கண்டி றோட் பரந்தனில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்ப்பாண அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. எஸ். கே. நவரட்ணம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணப்பிரிவு.

நீர்ப்பாசனப் பொறியியலாளர் பணிமனை,
நாவற்குழி - கைதடி.
01 - 06 - 1990. [சி-4672]

*Vacancy in Libya*

**Computer Operator - Salary - LD 120**

Fluent in English an Typing skills, more than two years experience with the MS - DOS operating system (IBM Compatibles), Word processing and spreadsheet. Knowledge of supercal, Multimate, Symphony would be considered an advantage.

**Accounts / Costing Clerk - Salary - LD 110**

Fluent in English, General accounting knowledge, preparing schedules for expense analysis, debtors and creditors, reconcilistions, Etc.,

I LD = US $ 3.3

CONDITIONS OF SERVICE:

**Age 25 — 45 years Two years contract. Mess facilities, lodging, medical, free**

**Please call over immediately at 18 1/4, Mudalige Mawatha. (off York Street) with documents. Urgent.**


**Indranee Agency**

Licence No. 616

நெல்லியடி, கரவெட்டி.

[3806]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்ரனி சாம்போல்
(உமைநேசன்)

ஆண்டவன் படைப்பு: 07 - 04 - 1974 அன்நியன் அழிப்பு: 05 - 06 - 1989

நாட்டைக்காக்க ஆயுதம் ஏந்தினாய் அமைதி காக்க வந்த அந்நியர்களால் அழிக்கப்பட்டாய்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அண்ணா, உறவினர், நண்பர்கள்.

பழையவாய்க்கால்,
மிருசுவில் (1340)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

DHL WORLDWIDE EXPRESS
C/o Cosmas Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

# உதயன்

05 - 06 - 1990 செவ்வாய்க்கிழமை

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
★ கடிதங்கள் ★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப
DHL WORLDWIDE EXPRESS

## இன்று உலக சுற்றாடல் தினம்

கொழும்பு ஜூன் 5

இன்று உலக சுற்றாடல் தினமாகும்.

'குழந்தைகளும் சுற்றாடலும்' என்பதை மையமாக வைத்து இத் தினத்தை உலக நாடுகள் அனுஷ்டிக்கின்றன

இலங்கையில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் தினத்தில் பாடசாலைகள் அதிகமாக பங்குபற்ற நடவடிக்கை எடுத்து உள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சுக்களும் இதனை அங்கீகரித்து உள்ளன.

இத் திட்டத்தின் கீழ் சுற்றாடல் தினமான இன்று ஒவ்வொரு குழந்தையும் ஒரு மரத்தை நடவேண்டும்.

இம் மரங்கள் பாடசாலை வளவுகளில் அல்லது வீதி அருகில் அல்லது வீட்டுத் தோட்டங்களில் நடப்பட வேண்டும்.

மரத்தை நடும் குழந்தையே அந்த மரத்தையும் பராமரித்து வர வேண்டும்,

இன்று தொடக்கம் ஒரு வாரம்வரை இந்த மரம் நடும் இயக்கம் இடம் பெறும். [இ-எ]



முதுபெரும் எழுத்தாளர் சொக்கனின் மணிவிழா கடந்த சனிக்கிழமை நாயன்மார்கட்டில் நடைபெற்றது.

மணிவிழா நாயகரும் அவரது பாரியாரும், விழா நடைபெற்ற மகேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதை இரண்டாவது படத்திலும்-

சொக்கனின் "மாருதப்பிரவல்லி" நாடக நூலை வெளியிட்டு வைத்து எழுத்தாளர் நந்தி உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. தி. கமலநாதன் தலைமையுரை நிகழ்த்துவதையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரை நல்குவதையும் நான்காம், ஐந்தாம் படங்களில் காணலாம். [அ-10]

## பனை அபிவிருத்தி பற்றி ஆராய சர்வதேச அதிகாரி வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பனை அபிவிருத்திக்காக பத்தாண்டு கால திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இது சம்பந்தமாக ஆராய விவசாய அபிவிருத்தி சர்வதேச நிதிய அதிகாரி திரு. ஜெரமி வோல்ஸ் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பனந் தொழில் சம்பந்தமாக ஐ நா. அபிவிருத்தித் திட்டம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆய்வின் முடிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தவே இந்த ஸ்தாபனம் பத்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது.

இதற்காக இங்கு வந்துள்ள அதிகாரி நேற்று சுன்னாகம், கண்ணாபுரம், கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

இன்று சாலை வடமராட்சி பகுதிக்கு இவர் விஜயம் செய்வார். அதன் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் கோண்டாவிலில் உள்ள பெண்கள் அபிவிருத்தி நிலையத்துக்கும் விஜயம் செய்வார்.

## மாணவ தலைவனும் சரண்!

கொழும்பு, ஜூன் 5

மொனறாகலை மாவட்ட சுதந்திர சரணடைவுக் கமிட்டியிடம் சரணடைந்த 24 இளைஞர்களில் ஊவா மாகாணப் பாடசாலை ஒன்றில் தலைமை மாணாக்கனாக (பிரிபெக்ட்) பணிபுரிந்த ஒருவரும் இருந்தார்.

இந்த மாணவர் அந்த பாடசாலையின் கிரிக்கெட் அணியின் கப்டனும் ஆவார்.

சரணடைந்த 24 பேரில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். 8 பேருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டது. எஞ்சியோர் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

## வரதராஜப்பெருமாள் நியமனமாகும் சாத்தியமில்லை

### தேர்தல் அதிகாரி கருத்து

மட்டக்களப்பு, ஜூன் 5

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சாம்தம்பிமுத்து மறைவு காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நியமிக்கப்படும்வாய்ப்புக்கள் இல்லை என தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பதவிக்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வேட்பாளர் பட்டியலில் விருப்பத்தெரிவு வாக்கு அடிப்படையில் இருந்துதான் ஒருவர் தெரிவுசெய்யப்படுவர் என்று கூறப்படுகிறது.

இப்பட்டியலில் நால்வர் தற்போது உள்ளனர். இந்நால்வரும் தெரிவு செய்யப்பட்டு பதவி விலகும்வரை, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக புதிய ஒருவர் நியமனம் பெற வாய்ப்பு இல்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். [இ-ரி]

## வடமராட்சியில் கடமை செய்த 13 முஸ்லிம் பொலீஸ் இடமாற்றம்

### கிழக்குக்கு அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றி வந்த 14 முஸ்லிம் பொலீஸார் இன்று முதல் கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் வெற்றிடங்களுக்குயாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் இருந்து 13தமிழ் பொலீஸார் அனுப்பப்பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வடபகுதியின் ஏனைய பொலீஸ் நிலையங்களில் முஸ்லிம் பொலீஸார் தொடர்ந்து கடமையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

### பயிலுநர் ஆசிரியர் விவகாரம்:

## மீள் பரிசீலனைக் குழு பணிப்பாளருடன் ஆலோசனை

யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர்களின் நியமனங்கள் பற்றிய மீள் பரிசீலனைக் குழு நேற்று யாழ்ப்பாணம் கல்வி அலுவலகத்தில் கூடியது.

இந்தக் குழுவுக்கு 5 பேர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று 3 பேர் மட்டுமே சமுகமளித்திருந்தனர்.

மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டிய நியமனங்கள், மற்றும் மனுக்கள். மீள்பரிசீலனையின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகியன பற்றி யாழ். கல்விப் பணிப்பாளருடன் குழுவினர் ஆலோசனை நடத்தினர்.

முடிவில் மீள் பரிசீலனையை விரைவில் ஆரம்பிப்பது என முடிவாகியது. [ஒ-9]

## கல்வி அலுவலகத்துக்கு செல்லவேண்டிய அவசியமில்லை

பயிலுநர் ஆசிரியர் மீள்பரிசீலனைக்கான மனுக்களைச் சமர்ப்பித்த எவரும் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வர வேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீள்பரிசீலனையின் போது அழைக்கப்படவும் மாட்டார்கள்.

இவ்வாறு யாழ். மாவட் பயிலுநர் ஆசிரியர் மீள் பரிசீலனை குழுவின் தலைவர் உயதனுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மீள்பரிசீலனை நடைபெறும் எனச் செய்தி வெளியாகியதை அடுத்து அதிக எண்ணிக்கையானோர் யாழ். கல்வி அலுவலகத்தில் கூடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீள்பரிசீலனை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று உதயனில் ... செய்தி வெளியிடப்பட்டது தெரிந்ததே. அதைத் தொடர்ந்து கல்வி அலுவலகத்துக்குச் சென்று பதில் பெறமுடியாத சிலர் உதயன் அலுவலகத்துக்கும் வந்து விசாரித்தனர். மீள்பரிசீலனை திணைக்களத்துக்கும் குழுவுக்கும் உட்பட்ட விடயம் என்றும், மேன்முறையீடு செய்தவர்கள் எவரும் அழைக்கப்படவில்லை என்றும் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-9)

### 5 சிப்பாய்கள் கைது

நித்தம்புவ, அத்தனகல்ல மற்றும் மஹரகம பொலீஸ் பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக வீரகுல பொலீஸார் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒரு கோப்ரல் உட்பட ஐந்து சிப்பாய்களையும் கைது செய்தனர்.

### வடபகுதி வீதிகள் புனரமைப்பு:

## ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும்பகுதி இன்னும் பாவிக்கப்படாமல் தேக்கம்

### அதனால் திரும்பப் பெறப்படும் ஆபத்து!

யாழ்ப்பாணம், ஜூன் 5

ஆசிய அபிவிருத்தி வங்கி வடபகுதி வீதிப் புனரமைப்புக்கு வழங்கிய பணத்தில் 75 வீதமான பணத்தையாவது இந்த ஆண்டு இறுதிக்குள் பயன்படுத்த வேண்டும்.

அவ்வாறு பயன்படுத்தாத மேலதிக நிதி அடுத்த வருடத்திற்கு ஒதுக்கப்படமாட்டாது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி முன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயன்படுத்தப்படாத நிதி திரும்பப் பெறப்படும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி வடக்கு - கிழக்கின் புனரமைப்பு பணிகளுக்கு ஏராளமான பணத்தை வழங்கியிருந்தது. அதில் வடபகுதிக்கு மட்டும் 40 கோடி ரூபாவை பிரத்தியேகமாக வழங்கி இருந்தது.

1987 இல் வழங்கப்பட்ட நிதி அந்தக் காலப் பகுதியில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் காரணமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தது. அந்த நிதியிலிருந்து இதுவரையில் 4 கோடி ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிலைமை சீரடைந்துள்ளதால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியில் ஆகக் குறைந்தது 75 வீதத்தை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக- யாழ்.-வவுனியா, வவுனியா -பறயனாலங்குளம், மதவாச்சி -மன்னார், மாங்குளம் - முல்லைத்திவு, பரந்தன் - முல்லைத்திவு, பரந்தன் - பூநகரி, யாழ்ப்பாணம் - பொன்னாலை - கீரிமலை, பருத்தித்துறை - தொண்டமானாறு- பருத்தித்துறை, புத்தூர்- மீசாலை, பருத்தித்துறை- மருதங்கேணி ஆகிய வீதிகளையும் புனரமைக்கவென இவ்வருடம் நிதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உடுப்பிட்டி: 2 வீடுகள் எரிந்தன

வல்வெட்டித்துறை, ஜூன் 5

உடுப்பிட்டியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தீ விபத்தில் இரு வீடுகள் எரிந்தன.

உடுப்பிட்டி இலகடி என்னுமிடத்தில் காலை 11.30 மணியளவில் நடைபெற்ற மேற்படி சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:-

திடீரென்று வெடிச் சத்தம் கேட்டது! தொடர்ந்து மின் கம்பியிலிருந்து பொறிகள் பறந்தன. எங்கும் புகைமயம். அச்சத்தால் மக்கள் கலவரமடைந்தனர். தம்பு சின்னத்துரை என்பவருடைய வீடு தீப்பற்றிக் கொண்டது. தீச் சுவாலை பரவி அடுத்த வீடும் எரியத் தொடங்கியது.

இந்த இரண்டு வீடுகளுக்கும் நேர் உயரே சென்றுகொண்டிருந்த உயர் அழுத்த மின் கம்பி பற்றி எரிந்து உருகி வீழ்ந்தது. தீயணைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அயலவர்களும் கலவரமடைந்தனர். எரிந்துகொண்டிருந்த வீட்டினுள் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைக் காப்பாற்றிய தாய்க்கு சிறு தீக் காயங்கள் ஏற்பட்டன.

இச்சம்பவத்தில் தம்பு சின்னத்துரை, சின்னராசா மோகன் ஆகியோரின் வீடுகளிரண்டும் முற்றாக எரிந்து சாம்பராயின.

சைக்கிள், தங்கச் சங்கிலி மற்றும் சகல தளபாடங்களும் முற்றாக எரிந்து விட்டன. இதனால் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வல்வை நகருக்கான மின் விநியோகம் தடைப்பட்டது. [இ-160]

### பொலீஸ் அதிகாரி தற்கொலை

கொழும்பு. ஜூன் 5

களுத்துறையில் முகாமிட்டுள்ள அதிரடிப் பொலீஸ் பிரிவில் பணியாற்றி வந்த பொலீஸ் அதிகாரி மகேசென் பூஜிதா ரைபிளால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

அவரது மரண விசாரணையில் அவர் தனது தாயாருக்கும், காதலிக்கும் எழுதிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

### பருப்பு வந்து சேர்ந்தது

கொழும்பு, ஜூன் 5

துருக்கியில் இருந்து ஆயிரத்து 300 மெட்ரிக்தொன் பருப்பு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இதனைக் கப்பலிலிருந்து இறக்கி விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவுத் தாபன தலைவர் திரு. ஆரியசமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வாரம் ஆயிரத்து 200 மெட்ரிக்தொன் பம்பாய் வெங்காயம் வந்து சேர இருப்பதாகவும் அவர் சொன்னார். [ஒ-பி]

### அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்' ஜூன் 5

யாழ். காணிப்பதிவகம் நேற்றிலிருந்து தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

றக்கா வீதியில் இயங்கி வந்த இந்த அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்ட போதும்' வேலைகள் ஒரு வாரத்துக்கு பின்னரே ஆரம்பமாகலாம் என்று தெரியவந்தது. [ஒ-3]

### மட்டக்களப்பில் நாற்றுமேடைதிட்டம்

பட்டிருப்பு ஜூன் 05

மட்டக்களப்பு- மாவட்ட வனவள திணைக்களம் மாவட்டப் பாடசாலை மட்டத்தில் நாற்று மேடைத்திட்டமொன்றைச்செயல்படுத்தும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ்: மாவட்டம்

பொதுக் கூட்டம்

காலம்:- 07 - 06 - 90 [ வியாழன் ] காலை 9.30 மணி
இடம்:- யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

இதுவரை பதிவு செய்த யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும், பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். (13404)

## மரண அறிவித்தல்கள்

### திரு. மா. நடராசா

சுழிபுரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு நடராசா [இளைப்பாறிய புகையிரத பாதுகாவலர்] சனியன்று காலமாகிவிட்டார். இவர் ராசமணியின் அன்புக் கணவரும் யோகராசா [முல்லைத்தீவு, விவசாய இலாகா], சந்திரராசா [ஜேர்மனி], அருள்ராசா [ஜேர்மனி] தேவராசா [இத்தாலி], நேசராசா [நோர்வே], நவமலர், மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அழகுராசா குணபாக்கியம், விமலா, கலைவாணி, தேவி, நந்தினி, பபா ஆகியோரின் அன்பு மாமனாரும், வரதராசா, ரகுநாதன், மலர் ஆகியோரின் பெரியதகப்பனாரும் (காலம் சென்ற கதிரவேலு [சன்னாசி], செல்லையா, பாக்கியம், நல்லையா, இராசம்மா, வேலுப்பிள்ளை, சின்னப்பிள்ளை, செல்லப்பா, அன்னமுத்து,) கந்தையா, சிவக்கொழுந்து பொன்னையா, செல்லம் இவர்களின் அன்புச் சகோதரரும் நாகமுத்து நாகம்மாவின் அன்பு மருமகனும், கிருஷா, கிருஷாந்தன், துஷயந்தன், பிரதீபன், சுதர்சன், சுயந்தன், ரஜிபன், சோபிகா, குகராஜ் [ஜேர்மனி], அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 06-06-1990 புதன் கிழமை 3-00 மணியளவில் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் புகையிரத உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்;
மனைவி, மக்கள்.

சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்.

[13340]

### அப்பாக்குட்டி கனகசபை

சட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாக்குட்டி இலட்சுமியின் மகனும், காலஞ்சென்ற சந்தையா முத்துப்பிள்ளையின் மருமகனும் ஆகிய இளைப்பாறிய Highways Dept. பொறியியலாளர் அப்பாக்குட்டி கனகசபை 04-06-1990 அன்று காலமானார்.

இவர் புவனபூபதியின் அன்புக் கணவரும், ரகு [பொறியியலாளர், லண்டன்] பாமினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நமசிவாயம், நல்லையா I P, தெய்வானை, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், றஞ்சிதபூபதி [கனடா], கோபாலகிருஷ்ணன் [டென்மார்க்] ஆகியோரது அன்பு மைத்துனருமாவர்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

[13401]

## மரண அறிவித்தல்

### தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து

சில்லாலை தெற்கைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து காலமானார்.

இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், ஹென்றி யோசவ் [புகையிரத நிலைய அதிபர், லண்டன்], புவிராசசிங்கம் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, முல்லைத்தீவு], இராஜநாயகம் [தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர் வழங்கல் வடிகால் சபை, யாழ்ப்பாணம்], பீற்றர் கனியூட் [சுவிட்சிலாந்து], அருளானந்தம் [சுவிட்சிலாந்து], டெய்சி, காலஞ்சென்ற பற்றிக் இம்மனுவல், ஜோன் பொஸ்கோ [பொறியியல் வளாகம், பேராதனை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சம்சுல்ஹிதாயா [இங்கிலாந்து], காலஞ்சென்ற மேரி பற்றிமா, யோகரஞ்சினி [உரிமையாளர், பிரபாகர் பார்மசி, முல்லைத்தீவு], விவியன், இமெல்லா [சுவிற்சிலாந்து], இந்திரா [சுவிற்சிலாந்து] ஜீவரட்டினம், (கிராம அபிவிருத்தி அதிகாரி சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 6 - 6 -90 புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு சில்லாலையில் நடைபெறும்.

தகவல்:
குடும்ப அங்கத்தினர்.

டெய்சி மகால்,
சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.

(13403)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org